# BSNL அறிவித்த விலையில்லா திட்டங்கள்…
# பயன்படுத்துவீர்… பயன்பெறுவீர்…..

அன்பார்ந்த பொதுமக்களே, வாடிக்கையாளர்களே!

இந்திய அரசாங்கத்திற்கு முழுவதுமாக சொந்தமான தொலைதொடர்பு நிறுவனம் BSNL. இந்த BSNL நிறுவனம் மொபைல் சேவை தர ஆரம்பிப்பதற்கு முன் தனியார் நிறுவனங்கள் அந்த சேவையினை கொடுத்து வந்தன. ஆனால் அவை மட்டுமே சேவை கொடுத்து வந்த போது inocoming கால்களுக்கும் கட்டணம் வசூலித்தனர். BSNL நிறுவனம் சேவை கொடுக்க ஆரம்பித்து incoming கால்களுக்கான கட்டணங்கள் இல்லை என அறிவித்த பின்னரே தனியார் நிறுவனங்களும் அந்த நிலையை எடுத்தன.

இன்றைக்கு தொலைபேசி கட்டணங்களை உயர்த்த வேண்டும் என்றும், இணையதளத்தை பயன்படுத்தி பேசும் கால்களுக்கும் கட்டணங்களை நிர்ணயிக்க வேண்டும் என்றும் அரசாங்கத்தை கேட்டு வருகின்றனர். ஆனால் BSNL நிறுவனம் இவற்றை ஏற்காத காரணத்தாலும், பொதுமக்கள் கடுமையான எதிர்ப்பை பதிவு செய்ததன் விளைவாகவும் அவை இன்று அமுலாக்கப்படவில்லை.

தனியார் நிறுவனங்கள் கட்டணங்களை உயர்த்தி சந்தாதாரர்களை கொள்ளையடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கும் போது BSNL நிறுவனம் சந்தாதாரர்களுக்கு மிகப்பெரிய பலன் தரும் இரண்டு திட்டங்களை அறிவித்துள்ளது.

தரைவழி தொலைபேசி சேவைகளிலிருந்து (ஒரு சில திட்டங்கள் தவிர்த்து) இரவு 9 மணி முதல் காலை 7 மணி வரை இலவச அழைப்பு திட்டத்தை அறிவித்துள்ளது. அதாவது BSNL தரைவழி தொலைபேசியிலிருந்து எந்த தொலைபேசிக்கும், எந்த நெட்வர்க்காக இருந்தாலும் சரி இந்த நேரத்தில் பேசக்கூடிய அழைப்புகளுக்கு எந்த ஒரு கட்டணமும் வசூலிக்கப்பட மாட்டாது. நாம் நமது உறவினர்களுடன், நண்பர்களுடன், யாராக இருந்தாலும் அவர்களுடன் மனம் விட்டு பணம் பற்றி கவலைப்படாமல் பேசலாம்.

மொபைல் தொலைபேசிகளில் தமிழகத்தை விட்டு வெளி மாநிலங்களுக்கு சென்றால் (மும்பை, டெல்லி உட்பட) அது ரோமிங் எனப்படும். அவ்வாறு செல்லும் போது இன்கமிங் கால்களுக்கும் கட்டணம் வசூலிக்கப்படும். தற்போது BSNL நிறுவனம் அவ்வாறு வெளி மாநிலங்களுக்கு செல்லும் போது வரும் இன்கமிங் கால்களுக்கு கட்டணம் இல்லை என்று அதிரடியாக அறிவித்துள்ளது. இதன் காரணமாக நாம், வியாபார நிமித்தமாகவோ அல்லது சொந்த காரியங்களுக்காகவோ தமிழகத்தை விட்டு வெளியே செல்லும் போது பணம் போகும் என்ற அச்சமின்றி இன்கமிங் கால்களை பேசலாம்.

இந்த இரண்டு விலையில்லா திட்டங்களும் இந்தியாவில் வேறு எந்த தொலை தொடர்பு நிறுவனமும் அறிவிக்காத திட்டங்கள். இது இப்போது BSNL நிறுவனத்தில் மட்டுமே உள்ளது. தனியார் நிறுவனங்கள் கட்டணங்களை உயர்த்தி சந்தாதாரர்களின் பணத்தை உறிஞ்ச நினைக்கும் சமயத்தில் இந்திய அரசாங்கத்திற்கு சொந்தமான BSNL நிறுவனம் மட்டுமே விலையை தளர்த்தி சேவையை அதிகரித்து வருகிறது.

எனவே பொதுமக்களும், சந்தாதாரர்களும் BSNLன் தரைவழி சேவைகளையும், மொபைல் சேவைகளையும் உடனடியாக பயன்படுத்தி லாபமடைய வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். இது ஒரு அரிய வாய்ப்பு. இந்த வாய்ப்பை பயன்படுத்தி மக்கள் சொத்தான BSNL நிறுவனத்தின் சேவைகளை பயன்படுத்தி லாபமடைவீர்!

**BSNL உங்களது நிறுவனம்…**
**BSNL நிறுவனம் உங்களுக்காக அறிவித்த திட்டங்களை (இலவசங்களை) பயன்படுத்துவீர்.**
**BSNL வளமானால் இந்திய நாட்டின் சொத்து வளரும்…**
**தனியார் நிறுவனம் வளமானால் தனி முதலாளியின் சொத்துதான் உயரும்.**
**மக்கள் சொத்து வளர BSNLஐ பயன்படுத்துவீர்…பயன்பெறுவீர்…!**